ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1778/6 - 2012 ඔක්තෝබර් මස 02 වැනි අඟහරුවාදා - 2012.10.02

*1778/6 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்*

*கட்டளை*

*1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 2 ஆம், 4 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

*(1) இதற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பை அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென பிரதேச சபை இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்றேன்.*

*(2) அந்த அட்டவணையின் பாகம் II இல் காட்டப்பட்டுள்ள எல்லைகளை அப்பிரதேச சபை இடப்பரப்பின் நிர்வாக எல்லைகளாக வரையறுக்கின்றேன்.*

*(3) இக்கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட பிரதேச சபை இடப்பரப்புக்கென ஒரு பிரதேச சபையை அமைத்துருவாக்கி அத்தகைய சபைக்குப் பின்வரும் பெயரைக் குறித்தொதுக்குகின்றேன்.*

***"மில்லனிய பிரதேச சபை"***

*(4) மில்லனிய பிரதேச சபையானது தவிசாளரையும், உப தவிசாளரையும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய ஒன்பது (09) உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதித்துரைக்கின்றேன்.*

*(5) மில்லனிய பிரதேச சபையின் பதவிக்காலம் ஆரம்பமாக வேண்டிய திகதியாக 2015, ஏப்பிறல் மாதம் முதலாம் திகதியைக் குறித்துரைக்கின்றேன்.*

*ஏ. எல். எம். அதாஉல்லா,*
*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012.09.26.*

**அட்டவணை**

*பாகம் I*

***களுத்துறை மாவட்டத்தின் மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு, -***

*(638) உடுவர மேற்கு, (638ஏ) உடுவர கிழக்கு, (638பீ) உடுவர வடக்கு, (638சீ) உடுவர தெற்கு, (639) பாதகட, (639ஏ) தெல்கொட, (639பீ) மகதுருபிட்டிய, (640) யட்டவர வடக்கு, (640ஏ) யட்டவர தெற்கு, (640பீ) பேகமுவ தல்பிட்டிய, (641) பனாகொட, (642) பல்பாத்த கிழக்கு, (642ஏ) கல்பாத்த மேற்கு, (643) பெல்பொல, (643ஏ) புன்சிரிபுர, (643பீ) இம்புலஹேன, (644) பரகஸ்தொட்ட, (644ஏ) தெல்கட, (644பீ) திக்ஹேன, (644சீ) ரத்தேகொட, (645) மில்லனிய, (645ஏ) அரகாகொட, (645பீ) தெல்தொரவத்த, (646) லகான, (646ஏ) மாவத்தகம, (647) ஹல்தொட்ட, (647ஏ) லெனவர, (647பீ) கெலெஸ்கமுவ, (649) பட்டகொட, (649ஏ) தொம்பகொட, (649பீ) முல்கடகந்த, (649சீ) அதிகாரிகொட, (651) பயாலகல, (651ஏ) வெளிவெல்பிட்டி, (651பீ) மில்லகஸ்பொல, (652) கன்னன்துடாவ, (652ஏ) பொரலஸ்ஸ, (653) லபுகம, (653ஏ))பெத்திகமுவ தெற்கு, (653பீ)பெத்திகமுவ வடக்கு, (654) வெலிகல, (654ஏ) திப்பொடுகொட, (655) குண்கமுவ மற்றும் (655ஏ) பெல்லன்துடாவ.*

*பாகம் II*

***மில்லனிய பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் -***

*வடக்கு:*
*களுத்துறை மற்றும் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை, மில்லனிய மற்றும் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திகசும் ஆரம்ப புள்ளியில் இருந்து பண்டாரகம மற்றும் மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக வடகிழக்கு நோக்கி கிழக்கு நோக்கி மற்றும் வடக்க நோக்கி சொல்லப்பட்ட எல்லை ஹொரண மற்றும் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையிலும் அவ்விடத்திலிருந்து ஹொரணை மற்றும் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின்பொது எல்லை ஊடாக தென்கிழக்கு நோக்கி வடகிழக்கு நோக்கி மற்றும் தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட பொது எல்லைக்கு மதுராவல மற்றும் ஹொரண பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்,*

*கிழக்கு :*
*மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து மதுராவல - மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக சொல்லப்பட்ட எல்லை களுகங்கையின் மத்திய கோட்டை சந்திக்கும் புள்ளி வரை வரையப்பட்ட கோட்டினால்,*

தெற்கு :
*மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து களுகங்கையின் மத்திய கோட்டின் ஊடாக சொல்லப்பட்ட மத்திய கோடு தொடங்கொட மற்றும் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையும் வரையப்பட்ட கோட்டினால்,*

*மேற்கு :*
*மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து களுத்துறை மற்றும் மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக வடமேற்கு நோக்கி மற்றும் வடக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லை ஆரம்பப் புள்ளி வரை வரையப்பட்ட கோட்டினாலும் ஆகும்.*

*10-687/1*

---

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

*கட்டளை*

*1999 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9அ பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், 1987, மே மாதம் 12 ஆந் திகதிய 453/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் அமைத்துருவாக்கம் தொடர்பான கட்டளையை, இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் -*

*(1) (அ)* இதற்கான அட்டவணையை நீக்கி இங்கு அட்டவணையை பதிலீடு செய்வதறன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

*(ஆ)* இதன் *(4)* வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "பதினாறு பேர்" என்ற பதங்களை நீக்கி அதற்குப் பதிலாக "பதினொரு பேர்" என்ற பதங்களை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

*(2) (அ)* மேற்கூறப்பட்ட திருத்தங்கள் *2015*, ஏப்பிறல் மாதம் முதலாந் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டுமென்று விதித்துரைக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2012.09.26.*

பாகம் I

**களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு, -**

*(656)* ரய்கம தெற்கு, *(656ஏ)* ரய்கம வடக்கு, *(656பீ)* ரய்கம கிழக்கு, *(656சீ)* ரய்கம மேற்கு, *(657)* பனாபே, *(657ஏ)* கொலமெதிரிய வடக்கு, *(658)* கிம்மன்துடாவ, *(659)* அட்டுலுகம கிழக்கு, *(659ஏ)* அட்டுலுகம மேற்கு, *(659பீ)* கொரவல, *(659சீ)* பமுனுமுல்ல (முஸ்லிம்), *(659டீ)* கல்கெமன்டிய, *(659ஈ)* போகஹவத்த, *(660)* பமுணுமுல்ல, *(660ஏ)* எபிட்டமுல்ல, *(661)* கெலெனிகம, *(661ஏ)* கொதலாவல, *(662)* வேவிட்ட, *(662ஏ)* யட்டியன, *(663)* பண்டாரகம, *(663ஏ)* பண்டாரகம கிழக்கு, *(663பீ)* பண்டாரகம மேற்கு, *(664)* வீதாகம கிழக்கு, *(664ஏ)* வீதாகம மேற்கு, *(665)* ரம்புக்கன வடக்கு, *(665ஏ)* ரம்புக்கன தெற்கு, *(665பீ)* பொல்கொட, *(666)* கம்புறுகொட கிழக்கு, *(666ஏ)* கம்புறுகொட மேற்கு, *(667)* கம்மன்பில, *(667ஏ)* சேருகான, *(667பீ)* வல்கம வடக்கு, *(667சீ)* சமரநாயகபுர, *(667னு)* வல்கம தெற்கு, *(668)* அளுத்கம, *(668ஏ)* மெதகம, *(668பீ)* எலேத்தியாவ, *(669)* ஹிந்தெல்பிட்டிய மேற்கு, *(669ஏ)* ஹிந்தெல்பிட்டிய கிழக்கு, *(669பீ)* சேனபுர, *(678)* மகாஅருக்கொட, *(678ஏ)* குடாஅருக்கொட கிழக்கு, *(678பீ)* நியூடாவ, *(678சீ)* குடா அருக்கொடமேற்கு, *(688)* பின்வல கிழக்கு, *(688ஏ)* பின்வலமேற்கு, *(688பீ)* வந்துரமுல்ல மேற்கு, *(688சீ)* வந்துரமுல்ல கிழக்கு, *(690)* மஹவில, *(690ஏ)* மாதுபிட்டிய, *(690பீ)* மிரிஸ்வத்த, *(691)* அளுபோமுல்ல கிழக்கு, *(691ஏ)* அளுபோமுல்ல மேற்கு, *(691பீ)* பட்டதொம்பதுடுவ , *(694)* பமுனுகம, *(694ஏ)* இம்புல்இக, *(694பீ)* திகனதுடுவ, *(695)* மகாபெல்லன மற்றும் *(695ஏ)* மகாவத்த .

*பாகம் I*

**பண்டாரகம பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் -**

*வடக்கு :*

பண்டாரகம மற்றும் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை கொழும்பு களுத்துறை மாவட்ட எல்லையை சந்திக்கும் ஆரம்ப புள்ளியில் இருந்து மாவட்ட எல்லை ஊடாக கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட மாவட்ட எல்லை ஹொரண -பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையிலும், அவ் இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கி ஹொரணை பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக சொல்லப்பட்ட எல்லைக்கு *(606)* கொட்டிகமுவ மற்றும் *(607சீ)* கும்புக்க வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்,

*கிழக்கு :*

மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து தெற்கு நோக்கிய ஹொரணை பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக சொல்லப்பட்ட பொது எல்லை *(656ஏ)* ரைகம வடக்கு மற்றும *(655)* குங்கமுவ ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையிலும், அவ் இடத்திலிருந்து தெற்கு நோக்கி பண்டாரகம-மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக சொல்லப்பட்ட எல்லைக்கு *(645)* மில்லனிய மற்றும் *(644சீ)* ரத்தேகொட ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்:

*தெற்கு :*

மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து மேற்கு நோக்கி பண்டாரகம - மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக மில்லனிய - களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையிலும்

அதிலிருந்து மேற்கு நோக்கி பண்டாரகம - களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக சொல்லப்பட்ட எல்லைக்கு களுத்துறை- பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும் அதிலிருந்து மேற்கு நோக்கி பாணந்துறை- பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக சொல்லப்பட்ட எல்லை பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவின் (697ஏ) தல்பிட்டிய தெற்கு : மற்றும் (696) பின்வத்த ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்,

*மேற்கு:*

மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து பாணந்துறை-பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக வடக்கு நோக்கிய ஆரம்ப புள்ளி வரை வரையப்பட்ட கோட்டினாலும் ஆகும்.

10-687/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.